**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்**
**தாவரவியல் பூங்கா புதுவை**

எண்.81/கூ.வே.இ.(தோ.க.)/தாவரவியல் பூங்கா/2021-22 தேதி: 25-3-2022

**மறு-ஒப்பந்தப்புள்ளி மற்றும் – அல்லது - மறு-பொது ஏல கால நீட்டிப்பு அறிவிப்பு**

புதுச்சேரி, தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான மரங்களின் 2022 வருடத்திற்கான காய்கனி மகசூல் அனுபவ உரிமத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பபட்டன. நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்தப்புள்ளிகளை 07.04.2022 மதியம் 1:00 மணி வரை தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்க கால நீட்டிப்பு செயப்பட்டுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 07.04.2022 மாலை 04.00 மணியளவில் புதுச்சேரி தாவரவியல் பூங்கா, தோட்டக்கலை கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகத்தில் ஏல நிர்ணயக்குழு முன்னிலையில் பரிசீலிக்கப்படும். ஒப்பந்த படிவங்கள் 07.04.2022 நண்பகல் 12.00 மணி வரை மேற்கண்ட அலுவலகத்தில் ரொக்கம் ரூ.105/- (GST @ 5% உட்பட) (திருப்பித்தரப்படமாட்டாது) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் (https://agri.py.gov.in) என்ற வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் இணையதளத்திலும் ஒப்பந்த படிவங்களை பதிவிறக்கம் செய்து ரூ.105/- க்கான ( GST @ 5% உட்பட) வரையோலையை (Demand Draft) (திருப்பிதரப்படமாட்டாது) கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), புதுச்சேரி (அல்லது) **The Additional Director of Agriculture (Horticulture), Puducherry** என்று குறிப்பிட்டு பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து கடைசி நேரம் மற்றும் தேதிக்குள் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்த புள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கவும்.

| வ.எண் | மரங்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலவம் பஞ்சு மரம் | 35 |
| 2 | தென்னை மரம் | 88 |
| 3 | மா மரம் | 80 |
| 4 | புளிய மரம் | 51 |

25/3/22

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)
தாவரவியல் பூங்கா, புதுவை

**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்**
**தாவரவியல் பூங்கா, புதுவை**

எண்.81/கூ.வே.இ.(தோ.க.)/தாவரவியல் பூங்கா/2021-22 தேதி: 25-3:2022

**மறு-ஒப்பந்தப்புள்ளி மற்றும் – அல்லது - மறு-பொது ஏல கால நீட்டிப்பு அறிவிப்பு**

புதுச்சேரி, தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான மரங்களின் 2022 வருடத்திற்கான காய்கனி மகசூல் அனுபவ உரிமத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பபட்டன. நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்தப்புள்ளிகளை 07.04.2022 மதியம் 1:00 மணி வரை தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்க கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 07.04.2022 மாலை 04.00 மணியளவில் புதுச்சேரி தாவரவியல் பூங்கா, தோட்டக்கலை கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகத்தில் ஏல நிர்ணயக்குழு முன்னிலையில் பரிசீலிக்கப்படும். ஒப்பந்த படிவங்கள் 07.04.2022 நண்பகல் 12.00 மணி வரை மேற்கண்ட அலுவலகத்தில் ரொக்கம் ரூ.105/- (GST @ 5% உட்பட) (திருப்பித்தரப்படமாட்டாது) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் (https://agri.py.gov.in) என்ற வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் இணையதளத்திலும் ஒப்பந்த படிவங்களை பதிவிறக்கம் செய்து ரூ.105/- க்கான ( GST @ 5% உட்பட) வரையோலையை (Demand Draft) (திருப்பிதரப்படமாட்டாது) கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), புதுச்சேரி (அல்லது) **The Additional Director of Agriculture (Horticulture), Puducherry** என்று குறிப்பிட்டு பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து கடைசி நேரம் மற்றும் தேதிக்குள் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்த புள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கவும்.

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

1. புதுச்சேரி, தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான மரங்களின் காய்கனி மகசூல் அனுபவ உரிமத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகளை முறையே **அரக்கினால் மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி உரையின் மீது ஏலம் கோருபவரின் பெயரை குறிப்பிட்டு கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), புதுச்சேரி-1, என்ற முகவரிக்கு 07.04.2022 மதியம் 1.00 மணிக்குள்** புதுச்சேரி, தாவரவியல் பூங்காவில் உள்ள கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), அலுவலகத்தில் பிரத்தியேகமாக வைக்கப்பட்டுள்ள "ஒப்பந்தப்புள்ளி பெட்டியில்" சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் **07.04.2022** மாலை 04.00 மணியளவில் ஏலம் கோருபவரின் முன்னிலையில் ஏல நிர்ணயக்குழுவினரால் பிரிக்கப்பட்டு மகசூல் ஏலம் நிர்ணயம் செய்யப்படும்.

2. ஏலத்தில் பங்கு பெறும் ஒப்பந்ததாரர்கள் **தாவரவியல் பூங்காவிற்காக, ரூ.5,000/-** (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) முன் வைப்புத்தொகையாக (E.M.D.) கேட்பு வரைவோலையை (Demand Draft) கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), புதுச்சேரி அல்லது The Additional Director of Agriculture (Horticulture), Botanical Garden, Puducherry என்று குறிப்பிட்டு இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

........2/-

3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெட்டி மூடி முத்திரையிடப்படும். அதற்குப் பின்வரும் ஒப்பந்தப் புள்ளிகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. ஒப்பந்த/ஏல விற்பனை முடிந்தவுடன் வெற்றி பெறாத நபர்களின் முன்காப்புத் தொகை திருப்பித் தரப்படும். ஏலம் முடிந்தவுடன் அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரர் அன்றைய தினமே முழு தொகையை செலுத்தவேண்டும்.

5. ஏலாதாரர் மூடி முத்திரையிடப்பட்ட உரையில் கோரிய ஏல கேட்பு தொகையானது, அரசினால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏல மதிப்பு தொகையை விட குறைவாக இருந்தாலோ அல்லது கடந்த ஏலம் விடப்பட்ட தொகையை விட குறைவாக இருந்தால் மட்டுமே, **வாய்மொழி ஏலம்** மூலம் ஏலத்தொகை நிர்ணயிக்கப்படும்.

6. ஒப்பந்த/ஏல விற்பனை முடிந்தவுடன் குத்தகை விடப்பட்ட மரங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரரையே சாரும்.

7. ஒப்பந்த/ஏல விற்பனை முடிந்தவுடன் குத்தகை விடப்பட்ட மரங்களின் தரம் மற்றும் அதன் மதிப்புப் பற்றி இந்த அலுவலகம் எந்தவிதமான பொறுப்பும் ஏற்காது.

8. ஒப்பந்தப்புள்ளியைப் பெறுவதற்கான காலக்கெடு முடிவடைந்த பின்பும், ஒப்பந்த முடிவை அறிவித்த பின்பும், அதனைத் திரும்பப் பெறுவது ஏற்க இயலாது.

9. எக்காரணத்தைக் கொண்டும் பசுமையான தென்னை மட்டைகளையோ, இதர மரங்களின் கிளைகளையோ வெட்டக்கூடாது.

10. குத்தகைதாரர் மரங்களுக்குத் தாங்களே காவல் போட்டுக்கொள்ள வேண்டும். வேளாண் அலுவலரின் ஒப்புதலோடு அதிகபட்சமாக 5 காவலாளர்களை வைத்துக்கொள்ளலாம். அவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை ஒன்றை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

11. மேலே குறிப்பிட்டுள்ள மரங்களை அரசினால் வெட்ட நேரிட்டால், அது சமயம் குத்தகைதாரர் மறுப்பு ஏதும் கூறாமல் மரங்களை வெட்ட அனுமதிக்க வேண்டும்.

12. அவ்வாறு வெட்டப்படும் மரங்களுக்கு ஈட்டுத்தொகை ஏதும் வழங்கப்படமாட்டாது.

13. குத்தகையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்ய நேர்ந்தால் அதனால் ஏற்படும் இழப்பிற்கு அரசு பொறுப்பு ஏற்காது.

14. குத்தகைக் காலம் முடிவடைந்ததும் அனைத்து மரங்களையும் நல்ல நிலையிலேயே திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

..3/-

15. ஏலம் எடுத்தவா் மகசூலை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வேளாண் அலுவலரின் அனுமதி பெற்று எடுத்து செல்லவேண்டும்.

16. ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புவோா் குத்தகைக்கு விடப்படும் மரங்களை வேளாண் அலுவலரின் அனுமதியோடு அலுவலக நாட்களில் பாா்வையிடலாம்.

17. இந்த ஏலம் சம்பந்தமாக கீழ்க்கையொப்பமிட்டுள்ளவரின் முடிவே இறுதியானது. யாதொரு காரணமும் கூறாமல் எந்த ஓா் ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கீழ்க்கையொப்பமிட்டுள்ளவருக்கு முழு உரிமை உண்டு.

18. இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் நட்டத்திற்கு அரசு பொறுப்பேற்காது.

19. அரசு சட்ட விதிகளுக்கு முரணான நடவடிக்கைகள் ஏதேனும் தாவரவியல் பூங்காவில் மேற்கொள்ளப் படுவதாக தகவல் வருமேயானால் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு அவர் செலுத்திய அனைத்து தொகையும் இழக்க நேரிடும் மற்றும் அவர் மீது சட்ட ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20. ஏலத்தில் பங்கேற்பவர்களின் மீது ஏலம் நடைபெறுவதற்கு முன் அல்லது பின் அவர்களின் மீது சமூக விரோத செயல்களில் ஈடுபட்டவராக தெரிய வந்தால் எந்த ஒரு முன் அறிவிப்பும் இன்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். மேலும் அவர் செலுத்திய அனைத்து தொகையும் இழக்க நேரிடும்.

21. அரசு துறை அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் ஏலத்தில் பங்கேற்க அனுமதியில்லை. மீறி பங்கேற்றதாக தெரியவந்தால், அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படுவதோடு அவர் செலுத்திய முன் வைப்புத்தொகையும் திருப்பி தரப்பட மாட்டாது.

22. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஒப்பந்த படிவத்துடன் கீழ் காணும் ஏதேனும் அரசு ஆதார சான்றிதழ் நகல் ஒன்றை கட்டாயம் இணைக்க வேண்டும். இவைகள் இணைக்கப்படாத ஒப்பந்தப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

1. ஆதார் அட்டை
2. வாக்காளர் அடையாள அட்டை
3. ஓட்டுநர் உரிமம்.

23/3/22

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)
தாவரவியல் பூங்கா, புதுவை

# மரங்களின் எண்ணிக்கை மற்றும் காய்கனி மகசூல் அனுபவிக்கும் காலம்

**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி**

(அ)

| வ.எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் |
|---|---|---|---|
| 1 | தென்னை மரம் | 88 | 15.12.2022 வரை |
| 2 | மா மரம் | 80 | 31.08.2022 வரை |
| 3 | புளிய மரம் | 51 | 15.12.2022 வரை |

(ஆ)

| வ.எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் |
|---|---|---|---|
| 1 | இலவம் பஞ்சு மரம் | 35 | 30.06.2022 வரை |

25/3/22

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)
தாவரவியல் பூங்கா, புதுவை

புதுச்சேரி அரசு
வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை
கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்
தாவரவியல் பூங்கா, புதுச்சேரி

எண்.81/கூ.வே.இ.(தோ.க.)/தாவரவியல் பூங்கா/2021 22 தேதி:

# ஒப்பந்தப்படிவம்

## தாவரவியல் பூங்கா, புதுச்சேரி

பெறுநர்:

கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை),
தாவரவியல் பூங்கா,
புதுச்சேரி.

(அ)

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் | ஏலம் கோரும் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | மா மரம் | 80 | 31.08.2022 வரை | |
| 2 | தென்னை மரம் | 88 | 15.12.2022 வரை | |
| 3 | புளிய மரம் | 51 | 15.12.2022 வரை | |

(அ.)

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் | ஏலம் கோரும் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | இலவம் பஞ்சு மரம் | 35 | 30.06.2022 | |

**இணைப்பு**

கேட்பு வரையோலை தொகை (ரூபாய்)---------------------------------- எண்---------------------------தேதி------------------------------

வங்கி------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒபபந்தத்தாரரின் கையொப்பம்

பெயர், முகவரி மற்றும் அலைபேசி எண்